பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 07 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, ட்ரினிடாட் டொபாகோ பயணத்தை முடித்துக்கொண்டு இன்று அர்ஜெண்டினா செல்கிறார்.
2. தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதன் மூலம் உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.
3. ஜம்மு காஷ்மீரின் வேளாண் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.
4. நாட்டில் சுய வேலைவாய்ப்பை அதிகரிப்பதில் காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் முக்கிய பங்காற்றுவதாக சிறு, குறு, நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் திரு ஜிதன் ராம் மாஞ்சி தெரிவித்துள்ளார்.
5. உலகக் கோப்பை குத்துச் சண்டைப் போட்டியில் இந்தியாவின் சாக்ஷி, அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது ஐந்து நாடுகள் அரசுமுறைப் பயணத்தின் மூன்றாம் கட்டமாக, டிரினிடாட் டொபாகோ பயணத்தை முடித்துக் கொண்டு இன்று அர்ஜெண்டினா செல்கிறார்.

இந்தப் பயணத்தின்போது அந்நாட்டு அதிபர் திரு சேவியர் மிலேயுடன் பிரதமர் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

பாதுகாப்பு, விவசாயம், சுரங்கம், எண்ணெய், எரிவாயு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வர்த்தகம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இருதலைவர்களும் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

இந்தியப் பிரதமர் ஒருவர் கடந்த 57 ஆண்டுகளில் அர்ஜென்டினாவிற்கு மேற்கொள்ளும் முதல் அரசுமுறைப் பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

தேசிய நெடுஞ்சாலைகளை மேம்டுத்துவதன் மூலம் போக்குவரத்தையும் உள்ளூர் பொருளாதாரத்தையும் மேம்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்டி மாநிலம் கார்வாவில் 2 ஆயிரத்து 456 கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டு தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

மாநிலத்தில் 40 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் நிறைவடைந்துள்ளதாகவும், 70 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் நெடுஞ்சாலைத் திட்டங்கள் விரைவான வளர்ச்சியை உறுதி செய்யும் என்று திரு நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு - காஷ்மீரில் வேளாண் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

அந்த யூனியன் பிரதேசத்தில் செயல்படுத்தப்படும் வேளாண் திட்டங்களை அவர் நேற்று ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஸ்ரீநகரில் 150 கோடி ரூபாய் செலவில் தாவர ஆய்வு மையம் அமைக்கப்படும் என்றார்.

ஜம்முவில் வேளாண் பல்கலைக்கழகத்தின் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

காஷ்மீரில் குங்குமப்பூ உற்பத்தியை மேலும் அதிகரிக்க திசு வளர்ப்பு ஆய்வகத்தை மத்திய அரசு அமைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

கதுவா, பாரமுல்லா, அனந்த்நாக் ஆகிய இடங்களில் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் நிறுவப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த ஆய்வுக் கூட்டம் மற்றும் செய்தியாளர் சந்திப்பில் ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக்கான மண்டல நிறுவனத்தை மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி இன்று ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் தொடங்கி வைக்கிறார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த நிறுவனம் மூலம் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான திறன் மேம்பாட்டு பணிகள் மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜார்கண்ட், பிஹார், ஒடிசா மற்றும் மேற்குவங்க மாநிலங்கள் இந்த நிறுவனம் மூலம் பயன்பெறும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஜம்மு காஷ்மீரின் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் மத்திய அரசு தொடர்ந்து முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

அந்த யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த குடிமைப் பணி அதிகாரிகளுடன் புதுதில்லியில் கலந்துரையாடிய அவர், வன்முறைகளை கட்டுப்படுத்துவதில் ஐபிஎஸ் அதிகாரிகள் முக்கிய பங்காற்றியுள்ளதாக தெரிவித்தார்.

மக்களை மையமாக கொண்ட நிர்வாகத்தில் அதிகாரிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த 11 ஆண்டுகளில் ஜம்மு காஷ்மீரில் உள்கட்டமைப்புகள் பெரிய அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

கூட்டுறவுத் துறை மூலம் இயற்கை வேளாண் பொருட்களை ஊக்கவிக்க மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. கிரிஷண் பால் குர்ஜார் கூறியுள்ளார்.

தேசிய இயற்கை வேளாண் கூட்டுறவு நிறுவனம் சார்பிலான இயற்கை உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியை புதுதில்லியில் அவர் தொடங்கி வைத்துப் பேசிய அவர், சிறு விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதில் கூட்டுறவுத் துறை முக்கிய பங்காற்றுவதாக தெரிவித்தார்.

சுற்றுச் சூழலையும் எதிர்கால தலைமுறையினரின் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க இயற்கை வேளாண் நடைமுறைகள் பெருமளவில் பின்பற்றப்பட வேண்டியது அவசியம் என்று திரு கிருஷண் பால் குர்ஜார் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் சுய வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதில் காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் முக்கிய பங்காற்றுவதாக மத்திய சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு ஜிதன் ராம் மாஞ்சி கூறியுள்ளார்.

மும்பையில் அந்த ஆணையத்தின் தலைமை அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்ட அவர், கிராமப் புற பொருளாதாரத்தை மேம்படுத்த இந்த ஆணையம் முக்கிய பங்காற்றுவதாகத் தெரிவித்தார்.

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் இந்த ஆணையத்தின் மேலும் தீவிரமாக செயல்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

நாட்டில் ஏராளமான கைவினைக் கலைஞர்களுக்கு இந்த ஆணையம் வாழ்வாதாரத்தை வழங்குவதுடன் சுயசார்பு இந்தியா என்ற இலக்கை அடைவதிலும் முக்கிய பங்களிப்பை வழங்கி வருவதாக திரு ஜிதன் ராம் மாஞ்சி குறிப்பிட்டார்.

<<<<>>>>

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட பிரதமரின் கதி சக்தி திட்டம் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு சாந்தனு தாக்கூர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் தொழில் வர்த்தக சபை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் துறைமுகங்கள் முக்கிய பங்காற்றுவதாகத் தெரிவித்தார்.

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தை ஊக்கவிக்க அரசு முன்னுரிமை அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் 2104-ம் ஆண்டில் ஐந்து உள்நாட்டு நீர்வழிகள் மட்டுமே இருந்தன என்றும் தற்போது அது 111 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதை மேலும் விரிவுபடுத்த மத்திய அரசு தீவிரமாக செயல்பட்டு வருவதாக திரு சாந்தனு தாக்கூர் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கிய வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் இளையோருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று தமிழகத்தின் சேலம் மண்டல தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையர் திரு. விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

**(Voice Byte – Vigneswaran – 44 Sec)**

<<<<>>>>

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் அடுத்த 5 நாட்களுக்கு கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஹிமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட், சத்தீஸ்கர், ராஜஸ்தான், பஞ்சாப், கோவா, குஜராத் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் சில இடங்களில் இன்று கனமழை பெய்யக் கூடும் என அந்த மையம் தெரிவித்துள்ளது.

கேரளா, லட்சத்தீவுகள், கர்நாடகா, தெலுங்கானா, கடலோர ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டின் சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என அந்த மையம் கூறியுள்ளது.

குஜராத், கொங்கன் மற்றும் கோவா கடலோரப் பகுதி மீனவர்கள் அடுத்த நான்கு நாட்களுக்கு கடலுக்குச் செல்ல வேண்டாம் என வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை குத்துச் சண்டைப் போட்டியில் இந்தியாவின் சாக்‌ஷி, அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் 54 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 5-0 என்ற புள்ளிக் கணக்கில் பிரேசிலின் **Chagas**-ஐ வென்றார்.

57 கிலோ எடைப்பிரிவில் **Jaismine**-னும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆடவர் 70 கிலோ எடைப்பிரிவில் ஹிதேஷும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

90 கிலோ எடைப்பிரிவில் நரேந்தரும், 75 கிலோ எடைப்பிரிவில் துபே-யும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<>>>>

ஜார்ஜியாவில் நடைபெற்ற உலகக் கோப்பை ஜூனியர் செஸ் போட்டியின் பத்து வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியாவின் **Sarbartho Mani** மற்றும் **Brijesh Divi-**யும், 12 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் **Pratitee**-யும் சாம்பியன் பட்டம் வென்றனர்.

<<<<>>>>

குரோஷியாவில் நடைபெற்று வரும் ராப்பிட் செஸ் போட்டியின் 6வது சுற்றில் இந்தியாவின் குகேஷ், நார்வேயின் மேக்னஸ் கார்ல்சனை வென்றார்.

<<<<>>>>

மலேசியா ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Disha Santhosh** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-12, 10-21, 21-14 என்ற செட் கணக்கில் மலேசியாவின் **Chang**-ஐ வென்றார்.

<<<<>>>>

உகாண்டா பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Subhrajeet** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று ஓவலில் நடைபெற உள்ளது.

**<<<<The End>>>>**